இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 27-02-2025

# மாநில மக்கள் உரிமையைக் காப்போம்!

மிக முக்கியமான அபாய ஒலியை எழுப்பி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

இன்றைக்கு தமிழ்நாட்டில் மொத்தம் 39 நாடாளுமன்றத் தொகுதிகள் இருக்கிறது. தொகுதி மறுசீரமைப்புச் செய்தால் இதன் எண்ணிக்கை 31 ஆகக் குறைந்து போகும் என்பதுதான் இந்த அபாய ஒலியாகும்.

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பைச் செய்யப் போகிறார்கள். மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை முறையாகப் பின்பற்றிய மாநிலங்கள் இதனால் பாதிக்கப்படப் போகின்றன. அதில் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் தான் அதிகம். மார்ச் 5 ஆம் நாளன்று அரசியல் கட்சிகளின் கூட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டி இருக்கிறார்கள்.

எதையாவது செய்து தமிழ்நாட்டு உரிமையைப் பறிக்கும் செயலை தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்து கொண்டிருக்கிறது. அதன் தொடர்ச்சி தான் இவை.

**மக்கள்தொகை கட்டுப்பாட்டை சிறப்பான முறையில் கடைப்பிடித்ததோடு, கல்விக்கு முக்கியத்துவம் அளித்து, சிறந்த பொருளாதார கட்டமைப்புகளை உருவாக்கியுள்ளது தமிழ்நாடு. தற்போதைய மக்கள்தொகை அடிப்படையில் மக்களவைக்கான மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை நிர்ணயிப்பது என்பது, நாம் அடைந்துள்ள இந்த வெற்றிக்குத் தண்டனை தரும் செயலை ஒன்றிய அரசு செய்யப் போகிறது.**

அரசியல் சாசன சட்டப்பிரிவு 82ன்படி ஒவ்வொரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டவுடன் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் ஒதுக்கப்படும் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை மறுவரையறை செய்யப்பட வேண்டும்.

**★ 1951ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுத்து முடிக்கப்பட்ட பின்னர் தொகுதிக்கு சராசரியாக 7.3 லட்சம் மக்கள் தொகை அடிப்படையில் மக்களவைக்கு 494 தொகுதிகள் என்று நிர்ணயிக்கப்பட்டது.**

**★ 1961ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பின்னர் தொகுதிக்கு சராசரியாக 8.4 லட்சம் மக்கள் தொகை என்கிற அடிப்படையில் நாடாளுமன்றத்திற்கு 522 தொகுதிகள் என நிர்ணயம் செய்யப்பட்டது.**

**★ 1971ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குப் பின்னர் தொகுதிக்கு சராசரியாக 10.1 லட்சம் மக்கள் தொகை என்கிற அடிப்படையில் மக்களவைக்கு 543 தொகுதிகள் என நிர்ணயம் செய்யப்பட்டது.**

குடும்பக்கட்டுப்பாடு திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்திய நிலங்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்வதை அடுத்த 25 ஆண்டுகளுக்கு நிறுத்திவைப்பதற்கான சட்டத் திருத்தத்தை 1976ம் ஆண்டு கொண்டுவந்தது பிரதமர் இந்திரா காந்தி அரசு. இதனை அடுத்தடுத்து வந்த அரசுகள் ஏற்றுக் கொண்டன. வாஜ்பாய் தலைமையிலான அரசும் 2002 ஆம் ஆண்டு இதனை ஏற்றுக் கொண்டது. ஆனால் 2026ம் ஆண்டுக்குப் பின்னர் வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில்தான் தொகுதி மறுவரையறை செய்யப்பட வேண்டும் என்று 84வது சட்டத் திருத்தம் கூறுகிறது. அதன்படி 2031ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் தொகுதி மறுவரையறை செய்ய முடியும்.

**2026ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிமறுவரையறை செய்யப்பட்டு மொத்த தொகுதிகளின் எண்ணிக்கை 543 ஆக நிர்ணயிக்கப்பட்டால் தென்இந்தியாவில் தற்போது உள்ள மாநிலங்களின் இடங்கள் 130 என்பதில் இருந்து 103ஆகக் குறையும்.**

தற்போது மக்களவையில் 23.74 சதவீதமாக உள்ள தென் இந்தியாவின் பிரதிநிதித்துவம், 18.97 சதவீதமாகக் குறையும் என தேர்தல் ஆணைய புள்ளி விபரங்களே தெரிவிக்கின்றன.

மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திய தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்கள் தலா 8 இடங்களை இழக்க நேரிடும். ஆந்திராவும், தெலுங்கானாவும் தலா 8 இடங்களை இழக்க நேரிடும். ஆனால் அதே நேரம் உ.பி. 11 இடங்களையும், பீகார் 10 இடங்களையும், ராஜஸ்தான் 6 இடங்களையும், மத்தியப் பிரதேசம் 4 இடங்களையும் கூடுதலாக பெறும்.

2026ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட்டு மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 848ஆக உயர்த்தப்பட்டால், தென் இந்தியாவின் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 164ஆக உயரும்.

ஆனால் பிரதிநிதித்துவத்தின் சதவீதம் தற்போது உள்ளதைவிட குறைவாக 19.34 சதவீதமாகத்தான் இருக்கும்.

உத்தரப்பிரதேசம் தற்போது 80 மக்களவை தொகுதிகளை கொண்டுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்பட்டு மொத்த எண்ணிக்கை 848ஆக உயரும்போது உத்தரப்பிரதேசத்தின் எண்ணிக்கை 143ஆக அதிகரிக்கும்.

பீகாரில் தற்போது உள்ள 40 இடங்கள் மொத்த எண்ணிக்கை 848ஆக அதிகரிக்கும்போது 79ஆக உயரும்.

மத்தியப் பிரதேசத்தில் தற்போது உள்ள 29 என்கிற எண்ணிக்கை 848ல் 52ஆக உயரும்.

மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்தியதற்காக வரிப் பகிர்வு, ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் தென் இந்திய மாநிலங்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், தொகுதி மறுவரையறைக்குப் பின்னர் மக்களவையில் தென் இந்தியாவின் அரசியல் பிரதிநிதித்துவமும் அடிபட்டுப் போகும். சிறப்பாகச் செயல்பட்டு வெற்றியடைந்த மாநிலங்களுக்குப் பரிசாக தண்டிக்க நினைக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறை என்பது தென் இந்தியாவின் தலைக்குக் கீழ் தொங்கும் கத்தி என மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரித்து வருகிறார். இதன் முனையை முறிக்க வேண்டிய கடமை தமிழ்நாட்டு மக்களுக்கு உண்டு.

●●

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் சிறப்பிதழ்!

## மார்ச் - 1 அன்று வெளிவருகிறது!



**'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட நாயகர், மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் சிறப்பிதழ் மார்ச் - 1 அன்று 'முரசொலி' நாளிதழுடன் வெளிவருகிறது!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.2.2025) சேலத்தில் நடைபெற்ற பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவரும், அக்கட்சியின் கௌரவத் தலைவருமான ஜி.கே.மணி அவர்களின் பேரன் டாக்டர் த. சேதுநாயக் – டாக்டர் கி.விமலாம்பிகை ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். உடன் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.அருள், எஸ்.சதாசிவம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### ரூ.5,000 கோடியில் 50 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில்

# கரூர் - பெரம்பலூர் மாவட்டங்களில் தோல் அல்லாத காலணி உற்பத்தி திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

**சென்னை, பிப்.27-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (26.2.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஃபீனிக்ஸ் கோத்தாரி குழுமத்தின் துணை நிறுவனமான எவர்வான் கோத்தாரி ஃபுட்வேர் லிமிடெட் நிறுவனம், கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில், 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 50,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தோல் அல்லாத காலணி உற்பத்தி திட்டத்தை நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு முகமையான தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம் மற்றும் எவர்வான் கோத்தாரி ஃபுட்வேர் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (26.2.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஃபீனிக்ஸ் கோத்தாரி குழுமத்தின் துணை நிறுவனமான எவர்வான் கோத்தாரி ஃபுட்வேர் லிமிடெட் நிறுவனம், கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில், 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 50,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தோல் அல்லாத காலணி உற்பத்தி திட்டத்தை நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு முகமையான தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம் மற்றும் எவர்வான் கோத்தாரி ஃபுட்வேர் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைச் செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, எவர்வான் ஷூடவுன் குழுமத்தின் தலைவர் ரான், கோத்தாரி இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ரஃபீக் அகமது, செயல் துணைத் தலைவர் பி. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பெரும் அளவில் முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும், தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பல்வேறு நடவடிக்கைகளை முனைப்புடன் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

அதன்படி, ஃபீனிக்ஸ் கோத்தாரி குழுமத்தின் துணை நிறுவனமான எவர்வான் கோத்தாரி ஃபுட்வேர் லிமிடெட் நிறுவனம், 5000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 50,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தோல் அல்லாத காலணி உற்பத்தி திட்டத்தை நிறுவுவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வதன் மூலம், தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்களான கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் இத்தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதால், இம்மாவட்டங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகள் உருவாகும். இதனால் இப்பகுதி மக்களின் தனிநபர் வருமானம் அதிகரிப்பதுடன், பொருளாதாரமும் மேம்படும்.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச்செயலாளர் நா. முருகானந்தம், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைச் செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, எவர்வான் ஷூடவுன் குழுமத்தின் தலைவர் ரான், கோத்தாரி இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ரஃபீக் அகமது, செயல் துணைத் தலைவர் பி. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.